# ஆரம்பப் பிரிவேனா பரீட்சை (புதிய பாடத்திட்டம்) மாதிரி வினாத்தாள்
## (12) இரண்டாம் மொழி தமிழ்
## புள்ளி வழங்கும் திட்டம்
## வினாத்தாள் I

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| **1** | 4 |
| **2** | 2 |
| **3** | 1 |
| **4** | 3 |
| **5** | 2 |
| **6** | 4 |
| **7** | 2 |
| **8** | 1 |
| **9** | 3 |
| **10** | 4 |
| **11** | 4 |
| **12** | 1 |
| **13** | 4 |
| **14** | 1 |
| **15** | 4 |
| **16** | 4 |
| **17** | 4 |
| **18** | 2 |
| **19** | 2 |
| **20** | 1 |

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| **21** | 2 |
| **22** | 2 |
| **23** | 3 |
| **24** | 3 |
| **25** | 1 |
| **26** | 2 |
| **27** | 3 |
| **28** | 1 |
| **29** | 2 |
| **30** | 2 |
| **31** | 3 |
| **32** | 3 |
| **33** | 1 |
| **34** | 2 |
| **35** | 3 |
| **36** | 4 |
| **37** | 3 |
| **38** | 4 |
| **39** | 1 |
| **40** | 3 |

ஒரு வினாவுக்கு ஒரு புள்ளி வீதம் 40 புள்ளிகள்
(1 x 40 = புள்ளிகள்)

## பகுதி II

| | | | | |
|---|---|---|---|---|
| வினா 01 | அ - | 4 × 2 | | 08 புள்ளிகள் |
| | ஆ - | உள்ளடக்கம் | 06 | 12 புள்ளிகள் |
| | | மொழித்திறன் | 04 | |
| | | அமைப்பு | 02 | |
| | | 12 + 08 | | 20 புள்ளிகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| வினா 04 | கடிதம் | | | |
| | | அமைப்பு | 03 | 10 புள்ளிகள் |
| | | உள்ளடக்கம் | 04 | |
| | | மொழித்திறன் | 03 | |

| | | | |
|---|---|---|---|
| வினா 06 | உரையாடல் | (1 × 10) | 10 புள்ளிகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| வினா 07 | அறிவித்தல் | | | |
| | | உள்ளடக்கம் | 05 | 10 புள்ளிகள் |
| | | மொழித்திறன் | 04 | |
| | | அமைப்பு | 01 | |

| | |
|---|---|
| வினா 02 | 2 × 5 = 10 புள்ளிகள் |
| வினா 03 | |
| வினா 05 | |

| | | |
|---|---|---|
| வினா 01 | | = 20 புள்ளிகள் |
| எவையேனும் 04 | 10 × 4 | = 40 புள்ளிகள் |
| மொத்தப் புள்ளிகள் | 20 + 40 | = 60 புள்ளிகள் |

| | |
|---|---|
| பகுதி I | = 40 புள்ளிகள் |
| பகுதி II | = 60 புள்ளிகள் |
| | = 100 புள்ளிகள் |

## (12) இரண்டாம் மொழி தமிழ்
## புள்ளி வழங்கும் திட்டம்
## வினாத்தாள் II

**1.** அ. பின்வரும் படத்தை அடிப்படையாகக் கொண்டு கருத்துள்ள நான்கு வாக்கியங்களை எழுதுக. ஒரு வாக்கியத்தில் ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்.
**පහත සඳහන් පින්තූරය පදනම් කර ගනිමින් අර්ථවත් වාක්‍ය හතරක් ලියන්න. සෑම වාක්‍යකම වචන හතරකට නොඅඩුව තිබිය යුතුය.**

- இது ஓர் அழகான ஊரினது படம் ஆகும்.
- இந்த படத்தில் நான்கு வீடுகள் காணப்படுகின்றன.
- பாதையின் இரு பக்கங்களிலும் நீர்த் தடாகங்கள் உள்ளன.
- தடாகத்தில் இரண்டு அன்னங்கள் நீந்துகின்றன.
- நீர் தடாகத்தில் பூக்கள் மலர்ந்து உள்ளன.
- ஊர்ப் பாதையில் மாட்டு வண்டி ஒன்று போகின்றது.
- வீட்டுக்கு ஒரு பக்கத்தில் வேலி ஒன்று அமைந்து உள்ளது.
- இந்த படத்தில் நிறைய மரங்கள் காணப்படுகின்றன.

(2 × 4 = 08 புள்ளிகள்)

ஆ. பின்வருவனவற்றுள் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 60 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.
**පහත දී ඇති ඒවායින් මාතෘකාවක් තෝරාගෙන වචන 60 ක් වන පරිදි රචනාවක් ලියන්න.**

### (i) நாம் சென்ற சுற்றுலா

தமது வதிவிடத்தில் இருந்து வேறு இடங்களுக்கு சென்று ஆற்றக் கண்டுகளிக்கும் செயற்பாடுகளை சுற்றுலா என்கிறோம். நாங்களும் எமது பிரிவேனாவில் இருந்து அநுராதபுரத்திற்குச் சுற்றுலா செல்லத் தீர்மானித்தோம்.
பயணத்தை மேற்கொள்வதற்கு முன்பு செல்லும் இடங்களையும் திகதியையும் வாகன ஒழுங்குகளையும் மேற்கொண்டோம். தேவையான பொருட்களையும் உணவுகளையும் ஒழுங்கு செய்தோம்.
நாங்கள் குறித்த தினத்தன்று காலை ஆறு மணியளவில் பயணத்தை ஆரம்பித்தோம். பத்து மணியளவில் அநுராதபுரத்தை சென்றடைந்தோம்.
அங்கு ருவண்வெலி தூபி, வெள்ளரச மரம், சமாதி புத்தர் சிலை உட்பட வழிபாட்டுத் தலங்கள் பலவற்றைக் கண்டுகளித்தோம். அவற்றை வணங்கி வழிபட்டோம். புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொண்டோம். மாலை ஏழு மணியளவில் மீண்டும் பிரிவேனாவுக்குத் திரும்பினோம்.

### (ii) சித்திரைப் புத்தாண்டு

சித்திரைப் புத்தாண்டு சிங்கள மக்களாலும் தமிழ் மக்களாலும் கொண்டாடப்படும் ஒரு தேசிய விழா ஆகும். இது சித்திரை மாதத்தில் கொண்டாடப்படும். சூரியன் மீன இராசியிலிருந்து மேஷ இராசிக்கு பிரவேசிப்பதை சித்திரை புத்தாண்டு என அழைக்கின்றோம்.
இக்காலத்தில் மரம் செடிகொடிகளில் பூக்கள் பூக்கும். மரங்களில் காய்களும் பழங்களும் நிறைந்து இருக்கும். பறவைகளும் மிருகங்களும் சந்தோசமாக திரியும் குயில்கள் கூவும்; முழுச் சூழலும் அழகாக இருக்கும்.
புதுவருடம் பிறப்பதற்கு முன்னர் அனைவரும் தத்தமது வீடுகளை சுத்தம் செய்வார்கள். அனைத்து வீடுகளிலும் இனிப்புப் பட்சணங்களைச் செய்வாரகள். கொக்கிஸ், பாற்சோறு, அவற்றுள் சிலவாகும்.
புத்தாண்டில் சுப நேரத்தில் எல்லா வேலைகளையும் செய்வார்கள். பால் பொங்குதல், அடுப்பு மூட்டுதல், உணவு உண்ணல் ஆகியவை சுப நேரத்தில் செய்யும் சில செயற்பாடுகள் ஆகும்.
சிறுவர்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்வர்கள். சந்தோசமாக விளையாடுவார்கள். அனைவரும் தத்தமது உறவினர்கள், நண்பர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியாக புத்தாண்டைக் கொண்டாடுவார்கள்.

(12 புள்ளிகள்)

**2.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பூரணமான வாக்கியத்தில் விடை எழுதுக.
**පහත සඳහන් ඡේදය කියවා,අසා ඇති ප්‍රශ්නවලට සම්පූර්ණ වාක්‍යවලින් පිළිතුරු ලියන්න.**

அ. நியூற்றனின் குடும்பத் தொழில் விவசாயம் ஆகும்.
ஆ. அவர் தனது பொழுதை காற்றாடி, நீர்க்கடிகாரம் போன்றவற்றைச் செய்வதில் கழித்தார்.
இ. அவர் தோட்டத்தில் வாசிப்பார், சிந்திப்பார், ஆக்கபூர்வமான விளையாட்டுகளில் ஈடுபடுவார்.
ஈ. அவருக்கு விவசாயத்தில் பயிற்சியளிக்க விரும்பினார்.
உ. அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கற்று கணிதப் பேராசிரியரானார்.

(5 × 2 = 10 புள்ளிகள்)

**3.** பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.
**පහත සඳහන් කවි පෙළ කියවා,අසා ඇති ප්‍රශ්නවලට සම්පූර්ණ වාක්‍යවලින් පිළිතුරු ලියන්න.**

அ. இந்தப் பாடல் பூவைப் பற்றிக் கூறுகிறது.
ஆ. மஞ்சள், சிவப்பு, நீலம், வெள்ளை, தங்க நிறம்.
இ. மலர் / புஷ்பம்
ஈ. அழு
உ. மனதுக்கு இனிய நிறம் வெள்ளை நிறம் ஆகும்.

(5 × 2 = 10 புள்ளிகள்)

**4.** பாடசாலை விடுமுறையின் போது செல்லவிருக்கும் சுற்றுலா பயணத்தில் கலந்துகொள்ளுமாறு அழைத்து உங்கள் நண்பருக்கு கடிதம் ஒன்று எழுதுக.
**පාසල් නිවාඩු කාලයේදී යාමට තිබෙන චාරිකාවට සහභාගිවන ලෙස ආරාධනා කොට ඔබගේ මිතුරාට ලියුමක් ලියන්න.**

சுமன தேரர்,
வித்யாலங்கார பிரிவேனா,
களனி.
05.06.2018.

அன்புள்ள சுமன பிக்கு,
உங்கள் சுகம் எப்படி? நான் நலமாக இருக்கிறேன். உங்கள் நாயக்க தேரர் மற்றும் ஏனைய பிக்குமார் சுகமாக இருக்கிறார்களா?

இப்பொழுது எமது பிரிவேனாவின் விடுமுறைக் காலம் அல்லவா? இந்த நாட்களில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நான் எனது விடுமுறைக் காலத்தைச் சந்தோஷமாகக் கழிப்பதற்கு ஒரு சுற்றுலாப் பயணம் செல்லத் தீர்மானித்து இருக்கிறேன். நான் கண்டிக்குச் சென்று தலதா மாளிகையை பார்க்கவும் அப்படியே நுவரெலியாவிற்குச் செல்லவும் தீர்மானித்து இருக்கிறேன். என்னுடன் சுதீர பிக்குவும் வருகிறார். நீங்களும் எங்களுடன் வருகிறீர்களா? நீங்களும் வந்தால் எங்களுக்கு சந்தோஷமாக இருக்கும். நீங்கள் கட்டாயம் வருவீர்கள் என எதிர்பார்க்கிறேன். உங்கள் பதிலை எதிர்பார்த்து இருக்கிறேன். இத்துடன் முடிக்கிறேன்.

இப்படிக்கு,
அன்பு நண்பர்
சுமன தேரர்.

(10 புள்ளிகள்)

**5.** கீழே தரப்பட்டுள்ள சிங்கள வாக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்க்குக.
**පහත දී ඇති සිංහල වාක්‍ය දෙමළ බසට පරිවර්තනය කරන්න.**

அ. இப்பொழுது நேரம் ஐந்து மணி நாற்பத்து ஐந்து நிமிடம்.
ஆ. நாய் கோபத்துடன் அவரைப் பார்த்தது.
இ. எமது பிரிவேனாவில் உள்ள பிக்குமார்கள் எட்டு பாடங்களைப் படிக்கிறார்கள்.
ஈ. நாம் எப்போதும் உண்மை பேசுவோம்.
உ. தைப்பொங்கல் பண்டிகை ஜனவரி மாதத்தில் கொண்டாடப்படும்.

(5 × 2 = 10 புள்ளிகள்)

**6.** பிரிவேனாவில் நாயக்க தேரருக்கும் ஒரு சாமணேர பிக்கு மாணவருக்கும் இடையில் இடம்பெறும் உரையாடல் ஒன்றை 10 வாக்கியங்களுள் அமையுமாறு எழுதுக.
**පිරිවෙනේ නායක හිමියන් හා සාමණේර ශිෂ්‍ය භික්ෂූන් වහන්සේ අතර සිදුවන දෙබසක් වාක්‍ය 10 කින් ලියන්න.**

சா.பி : நாயக்க தேரர் அவர்களே, நான் உள்ளே வரலாமா?
நா.தே : ஆமாம், வாருங்கள் சாமணேர பிக்கு அவர்களே. என்ன விஷயம்?
சா.பி : நாயக்க தேரரே, எனக்கு அவசரமாக வீட்டுக்குப் போக வேண்டும்.
நா.தே : ஏன்?
சா.பி : அம்மாவுக்கு சுகமில்லை தேரரே.
நா.தே : அப்படியா? என்ன வருத்தம்?
சா.பி : அவருக்கு டெங்குக் காய்ச்சல். மிகவும் கஷ்டப்படுகிறார்.
நா.தே : அவருக்கு உதவிக்கு யாரும் இல்லையா?
சா.பி : இல்லை தேரரே. நான் தான் போக வேண்டும்.
நா.தே : சரி, அப்படி என்றால் போய் வாருங்கள். உங்கள் அம்மா விரைவாக குணமடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.
சா.பி : நல்லது, நாயக்க தேரரே. நான் போய் வருவேன்.

(1 × 10 = 10 புள்ளிகள்)

**7.** ஸ்ரீ ஞானோதய பிரிவேனாவில் நடைபெறவுள்ள மாபெரும் புத்தகக் கண்காட்சி ஒன்றினைப் பற்றிய அறிவித்தல் ஒன்றினை எழுதுக.
**ශ්‍රී ඥානෝදය පිරිවෙණේ පවත්වන මහා පොත් ප්‍රදර්ශනය ගැන කෙටි දැන්වීමක් සකස්කරන්න,**

மாபெரும் புத்தகக் கண்காட்சி

10.08.2018 அன்று காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 வரை ஸ்ரீ ஞானோதய பிரிவேனாவில் மாபெரும் புத்தகக் கண்காட்சி ஒன்று நடைபெற உள்ளது. இதில் பல்வேறு துறைகளைச் சார்ந்த நூல்கள், புகழ் பெற்ற எழுத்தாளர்களின் நூல்கள் மற்றும் பல மொழிகளிலான நூல்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. கண்காட்சியில் மலிவு விலையில் நூல்களை வாங்கலாம். அனைவரும் வருகை தந்து கண்காட்சியைப் பார்வையிடுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

தலைமைத் தேரர்,
ஸ்ரீ ஞானோதய பிரிவேனா,
நுகேகொட.

(10 புள்ளிகள்)

* * *